

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (16.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், ஒரத்தநாடு மற்றும் நெய்வேலி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்துப் பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்குப் புத்தகத்தையும் வழங்கினார்.

### பா.ஜ.க.வின் வாக்குத் திருட்டைக் கண்டித்து

# பீகாரில் 16 நாட்கள் நடைபயணம்!

## ராகுல் காந்தி இன்று தொடங்குகிறார்!

பாட்னா, ஆக. 17 - பா.ஜ.க.வின் வாக்குத் திருட்டு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் பீகாரில் 16 நாட்களில் ஆயிரத்து 300 கிலோ மீட்டர் நடைபயணத்தை ராகுல் காந்தி இன்று தொடங்குகிறார்.

பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் மூலம் 65 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலையும், அதற்கான காரணத்தையும் தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும் என உத்தரவிட்டது.

இதனிடையே, தேர்தல் ஆணையம் பாஜகவுடன் இணைந்து சட்டமன்றம் மற்றும் மக்களவை தேர்தலில் வாக்கு திருட்டில் ஈடுபட்டதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டினார். ஆதாரங்களுடன் அவர் வெளியிட்டுள்ள இக்குற்றச்சாட்டு நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதனைக் கண்டித்து கடந்த திங்கள்கிழமை, நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து தேர்தல் ஆணையம் நோக்கி பேரணி நடத்திய ராகுல் காந்தி உள்ளிட்ட 250 எம்.பி.க்கள் பாதி வழியில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் வாக்குத் திருட்டு தொடர்பாக மக்களிடையே, விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இன்று முதல் 16 நாட்களுக்கு பீகாரில் ராகுல் காந்தி நடைபயணம் மேற்கொள்ள உள்ளார்.

சுமார் ஆயிரத்து 300 கிலோ மீட்டர் தூரம் கொண்ட இந்த நடை பயணம், ரோத்தாஸ் மாவட்டத்தில் உள்ள சசாராம் எனும் பகுதியில் இன்று தொடங்கி, செப்டம்பர் ஒன்றாம் தேதி பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் நிறைவடையும் என காங்கிரஸ் அறிவித்துள்ளது. இந்த நடைபயணத்தில் இந்தியா கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராகுல் காந்தியின் நடைபயணத்தில் "இந்தியா" கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர்.

### வாக்குத்திருட்டு என்ற சட்டவிரோத பரிமாற்றத்தை திசை திருப்ப அமைச்சர் ஐ.பெரியசாமி இடங்களில் சோதனை நடத்துவதா?

# EDக்கும் அஞ்ச மாட்டோம் - மோடிக்கும் அஞ்ச மாட்டோம்! சட்டப்படி சந்திப்போம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

**சென்னை, ஆக.17-**

**முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பப்பட்ட கோப்பு இன்னமும் நிலுவையில் இருக்கிறது. தனது ஏஜெண்டான ஆளுநருக்கு அறிவுரை சொல்லி அனுமதி அளிக்கும்படி செய்ய வேண்டிய ஒன்றிய அரசு, எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் அமலாக்கத்துறையை ஏவி விடுவது வாடிக்கையாக இருக்கிறது. EDக்கும் அஞ்ச மாட்டோம்! மோடிக்கும் அஞ்சமாட்டோம்! சட்டபடி எதிர்கொள்வோம்! 'வாக்கு திருட்டு' என்ற சட்டவிரோத பரிமாற்றத்தை திசை திருப்ப அமைச்சர் ஐ.பெரியசாமி தொடர்புடைய இடங்களில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் எடுபிடி அமலாக்கத்துறை சோதனை என்ற பெயரில் அத்துமீறுகிறது என கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு தொடர்புடைய இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தியிருக்கிறார்கள்.

2006-2011 தி.மு.க. ஆட்சியில் வீட்டு வசதி வாரியத்துறை அமைச்சராக ஐ.பெரியசாமி அவர்கள் இருந்த போது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்தாக சொல்லி, பழிவாங்கும் நடவடிக்கையாக அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சியில் வழக்கு போடப்பட்டது. இந்த வழக்கில் இருந்து 2012 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றம் அவரை விடுவித்து உத்தரவிட்டது. இதனை சென்னை உயர்நீதிமன்றம் சமீபத்தில் ரத்து செய்த நிலையில்தான், இந்த வழக்கில் சட்டவிரோத பண பரிமாற்றம் நிகழ்ந்துள்ளதா? என அமலாக்கத்துறை விசாரணை நடத்தியது.

**அமலாக்கத்துறையின் அரசியல் பழிவாங்கும் செயல்!**

உளவுத் துறை ஐ.ஜியாக இருந்த ஜாபர்சேட்டுக்கு வீட்டுவசதி வாரியம் சார்பில் நிலம் ஒதுக்கப்பட்ட விவகாரத்தில் அமலாக்கத்துறை கையில் எடுத்து விசாரணை மேற்கொண்டு வந்தது. இந்த வழக்கில் 2022ல் அமலாக்கத் துறை அனுப்பிய சம்மனை ஏற்று ஐ.பெரியசாமி விசாரணைக்கு ஒத்துழைப்பு அளித்தார். சுமார் 9 மணி நேரம் விசாரணை நடத்தினார்கள் அமலாக்கத்துறை அதிகாரிகள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு பதியப்பட்ட இந்த வழக்குகளில் அதுகாலம் வரையில் தலையிடாத அமலாக்கத் துறை, திமுக ஆட்சிக்கு வந்த பிறகு தீவிரம் காட்டுவது அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்பது அரசியல் அறியாத எட்டாம வகுப்பு மாணவனுக்கும் கூட தெரியும். அமலாக்கத் துறை விசாரணைக்கு ஐ.பெரியசாமி ஒத்துழைத்த பிறகும் கூட இன்றைக்கு திடீரென சோதனை நடத்தியிருப்பது சந்தேகங்களை எழுப்புகிறது.



விடுதலை பெற்ற வரலாற்றையும் விடுதலை வீரர்களின் தியாகத்தையும் நினைவு கூற வேண்டிய சுதந்திர தின வாழ்த்து செய்தியில், அரசியல் அவதூறுகளை அள்ளி வீசினார் ஆளுநர் ஆர்.என்.ரவி. மக்களால் தேர்தெடுக்கப்பட்ட அரசை அரசியல்வாதி போல குற்றச்சாட்டுகளால் வசை மாறி பொழிந்தார். இதையெல்லாம் சுட்டிக் காட்டி மறுப்பு தெரிவித்தோம். இந்த நிலையில்தான் இன்றைக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தப்பட்டிருக்கிறது.

**பொய் வழக்குகளை சட்டப்படி சந்திப்போம்!**

பா.ஜ.க. வாசிங் மிஷினில் விழுவதற்கு நாங்கள் தவறு செய்தவர்கள் அல்ல. பொய் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்கள்; பொய் வழக்கு போடப்பட்டவர்கள். அதனை நீதிமன்றத்தின் நிரூபித்து காட்டி, வெளியே வருவோமே தவிர, பாஜக வாசிங் மிஷினில் கழுவி, வழக்குகளை வாபஸ் பெற திமுகவினர் கோழைகள் அல்ல. சுயமரியாதை பாதையில் வந்தவர்கள். அடக்குமுறைக்கு அஞ்சாதவர்கள். அவசரகால நெருக்கடிகளை போல எத்தனையோ தழும்புகளுக்கு சொந்தக்காரர்கள்.

'சட்டவிரோத பண பரிமாற்றம்' என சொல்லி அமலாகத்துறை செய்யும் அடாவடிகள் ஒவ்வொன்றும் நீதிமன்றத்தில் அவமானப்பட்டு கொண்டிருக்கின்றன.

* "கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் அமலாக்கத்துறை 5,300 வழக்குகள் பதிவு செய்துள்ளது. ஆனால் வெறும் 40 வழக்குகளில் மட்டுமே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அமலாக்கத்துறை மீது மக்களுக்கு சந்தேகம் எழுந்துள்ளது" என்று உச்ச நீதிமன்ற நீதிபதி உஜ்ஜால் பூயான் சொன்னார்.

* மூடா ஊழல் வழக்கில், "அரசியல் மோதல்களுக்கு ஏன் ED பயன்படுத்தப் படுகிறது?" என உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் கேள்வி எழுப்பினார்.

* சத்தீஸ்கர் மதுபானக் கொள்கை ஊழல் வழக்கில், "ஆதாரமே இல்லாமல் குற்றம் சாட்டுவதை அமலாக்கத் துறை, தற்போது வாடிக்கையாகக் கொண்டுள்ளது. அமலாக்கத் துறையால் பதிவு செய்யப்படும் ஏராளமான வழக்குகளில் இதை நாங்கள் பார்க்கிறோம்" என உச்ச நீதிமன்றம் காட்டமாக விமர்சனம் வைத்தது.

**மோடி ஆட்சியில் அமலாக்கத்துறையின் அத்துமீறல்கள்!**

அதிகாரம் மற்றும் தன்னாட்சி கொண்ட அமைப்புகளை எல்லாம் தன்னுடைய தேர்தல் அரசியல் கருவிகளாகப் பயன்படுத்தி வருகிறது மோடி அரசு. 'சட்டவிரோத பண பரிமாற்றம்' என பேசும் ஒன்றிய அரசுதான் 'வாக்கு திருட்டு' அரசியலை நடத்தி கொண்டிருக்கிறது. தேர்தல் ஆணையத்தைப் பயன்படுத்தி, பாஜக வாக்கு மோசடி செய்திருப்பது இன்றைக்கு அம்பலப்பட்டு நிற்கிறது. இதனைக் கண்டு நாடே அதிர்ச்சி அடைந்துள்ளது. வாக்கு திருட்டு' என்ற சட்டவிரோத பரிமாற்றத்தை திசை திருப்ப அமைச்சர் ஐ.பெரியசாமி தொடர்புடைய இடங்களில் ஒன்றிய பாஜக அரசின் எடுபிடி அமலாக்கத்துறை சோதனை என்ற பெயரில் அத்துமீறுகிறது.

சில முன்னாள் அதிமுக அமைச்சர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பப்பட்ட கோப்பு இன்னமும் அவரிடம் நிலுவையில் இருக்கிறது. தனது ஏஜெண்டான ஆளுநருக்கு அறிவுரை சொல்லி அதற்கு அனுமதி அளிக்கும்படி செய்ய வேண்டிய ஒன்றிய அரசு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் அமலாக்கத் துறையை ஏவி விடுவது வாடிக்கையாக இருக்கிறது. அதிமுக முன்னாள் அமைச்சர்கள் பலர் மீது FIR போடப்பட்டு, குற்றப்பத்திரிகையும் சிலர் மீது தாக்கலாகிவிட்டது. இவ்வளவுக்குப் பிறகும் அவர்கள் பக்கம் ED தலை வைத்தும் படுக்கவில்லை.

**தொடர்ந்து தோற்றும் திருந்தாத பா.ஜ.க.!**

இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஏதாவது திமுக அமைச்சர் வீட்டில் ED சோதனை நடத்தி குற்றத் தோற்றத்தை உருவாகுவது மட்டுமே ஒன்றிய அரசின் ஒரே குறிக்கோளாக இருக்கிறது. அதனை வைத்து பாஜக தலைவர்களும் பாஜகவின் அடிமைகளும் தங்களது மனம்போன போக்கில் அவதூறுகளை அள்ளித் தெளிப்பதும் வாடிக்கையாக நடைபெற்று வருகின்றது. இந்த துருப்பிடித்த ஆயுதங்களை எல்லாம் மழுங்கடிக்கப்பட்டே வருகிறது. இந்த அவதூறுகளை எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் நம்பப் போவதில்லை. அது தெரிந்தும் தொடர்ந்து தோற்றுக் கொண்டே இருக்கிறார்கள்.

தி.மு.க.வினர் எவரொருவரும் மோடிக்கும் அஞ்ச மாட்டார்கள்; EDக்கும் அஞ்சமாட்டார்கள். தி.மு.க.வின் தலைவரும் தொண்டர்களும் தமிழ்நாட்டின் பாதுகாவல் அரண். அதனால் தமிழ்நாட்டு மக்கள் தி.மு.க.வுடன் ஓரணியில் திரண்டு நிற்கின்றனர். இதனைக் கண்டு மென்மேலும் எரிச்சலுற்று இதுபோன்ற ED சோதனைகளை நடத்தி அச்சுறுத்த கனவு காண்கின்றனர். அது தமிழ்நாட்டில் எடுபடாது.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### "உடன்பிறப்பே வா"

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை!

சென்னை, ஆக. 17 - "உடன்பிறப்பே வா" எனும் தலைப்பில், தி.மு.க. நிர்வாகிக ளுடன், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரடியாக ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 'உடன்பிறப்பே வா' எனும் தலைப்பில் தொகுதி வாரியாக தி.மு.க. நிர்வாகிகளை, தனித்தனியாக சந்தித்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறார். இந்த சந்திப்பின்போது, கட்சியின் ஆக்கப்பணிகள், தேர்தல் செயல் திட்டங்கள் குறித்து திமுக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்.

இந்நிலையில், மூன்று தொகுதிகளைச் சேர்ந்த கட்சியின் நிர்வாகி களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று ஆலோசனை மேற்கொண்டார். சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் இந்த கலந்துரையாடலில், மூன்று தொகுதிகளை சேர்ந்த ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் பங்கேற்றனர்.

அப்போது "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பில் பூத் அளவிலான உறுப்பினர் சேர்க்கை குறித்தும், ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் குறித்த விவரங்களை யும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் வடக்கு ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் எல்.இதயவர்மன் ஏற்பாட்டில் அ.தி.மு.க பா.ம.க தே.மு.தி.க உள்ளிட்ட கட்சிகளில் இருந்து 1150க்கு மேற்பட்ட மாற்றுக்கட்சியினர் அக்கட்சியில் இருந்து விலகி கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தொகுதி பார்வையாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை, திருப்போரூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் எம்.சேகர், பேரூர் செயலாளர் மு.தேவராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புச்செழியன், ஒன்றியக்குழு உறுப்பினர் அருண்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### திராவிடக் கொள்கைகளை ஒரு கேப்சூலில் அடைத்த

# கொள்கைப் பிழிவாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுதந்திர நாள் உரை திகழ்கிறது!

## விடுதலை ராஜேந்திரன் புகழாரம்!

*சென்னை, ஆக. 17 -* முதலமைச்சர்களுக்கு சுதந்திர நாளில் கொடியேற்றும் உரிமையை பெற்றுத் தந்தவர் கலைஞர்.

அந்த நாளில் தமிழக முதலமைச்சர் மு.,க.ஸ்டாலின் அவர்கள் கொடியேற்றி ஆற்றிய உரை மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுதந்திரப் போராட்டத்திற்கு எந்த ஒரு குறிப்பிட்ட பிரிவினரோ; குறிப்பிட்ட மதத்தினரோ உரிமை கோர முடியாது

அனைத்து தேசிய இனங்களும் மதத்தினரும் போராடிப் பெற்றதுதான் சுதந்திரம்!

உண்மையான சுதந்திரம் என்பது என்ன?

மதவெறி நிராகரிப்பு; பாகுபாடுகள் ஒழிப்பு; விளிம்பு நிலை மக்களின் பாதுகாப்பு ;இதுதான் உண்மை சுதந்திரத்தின் அடையாளம்

வேற்றுமையில் ஒற்றுமை வழியாகவே ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும் (ஒற்றை இந்தியா ஒற்றுமையை உருவாக்காது)

மக்களுடன் நெருக்கமாக இருப்பது மாநில அரசுகளே தவிர, ஒன்றிய அரசு அல்ல!

அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் சட்டம் கூட்டாட்சி இந்தியா என்பதை உறுதி செய்கிறது.

மாநில உரிமைகளுக்காகவும் உரிய நிதியை பெறுவதற்காகவும் போராட வேண்டி இருக்கிறது. நீதிமன்றத்தில் வழக்குகளை தொடுத்து உரிமையைப் பெற வேண்டிய நிலை இருக்கிறது; இது கூட்டாட்சி இந்தியாவுக்கு எதிரானது பல்வேறு தேசிய இனங்கள், மதங்கள், மொழிகளைக் கொண்ட இந்தியா ஒரு துணை கண்டம்

இவ்வாறு திராவிட இயக்கத்தின் கொள்கைகளை ஒரு குடுகைக்குள் (கேப்சூல்) அடைத்து, கொள்கைப் பிழிவாக முன் வைத்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

இப்படி ஒரு சுதந்திர நாள் உரையை இந்தியாவில் வேறு எந்த மாநில முதல்வரி டமிருந்தும் கேட்டிருக்க முடியாது. டெல்லி சுதந்திர நாள் விழாவில் பேசிய பிரதமர் மோடி ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு புகழாரம் சூட்டியிருக்கிறார். நான்கு முறை தடை செய்யப்பட்ட அமைப்பு ஆர்.எஸ்.எஸ்.



அரசியல் சட்டம் வலியுறுத்தும் மதச்சார்பற்ற கொள்கையை அழிக்க வேண்டும் என்பதே அதன் லட்சியம். அந்த அமைப்பு மோடியின் பார்வையில் மிகச்சிறந்த தொண்டு நிறுவனமாக தோன்றுகிறது. மோடியின் பதவி விலகலை வலியுறுத்தத் தொடங்கியுள்ள அந்த அமைப்பை குளிர்வித்து தாலாட்டுவதற்கு சுதந்திர நாள் உரையை பயன்படுத்துவது பிரதமருக்கு உரிய மாண்புதானா? சுதந்திர நாளில் தமிழ்நாடு முதல்வரின் "கொடியேற்று உரை, திராவிட இயக்கத்தின் 'சுதந்திரம்' குறித்த பார்வையை தெளிவாக்குகிறது. தனித்துவத்துடன் தமிழரின் அடையாளத்தை தலைநிமிரவைக்கிறது.

இவ்வாறு விடுதலை ராஜேந்திரன் புகழாரம் சூட்டியுள்ளார்.



திருவள்ளூர் தொகுதி பூண்டி மேற்கு ஒன்றியம் இராமஞ்சேரியில் எல்லப்ப நாயுடு பேட்டை, காரணி நிசாம் பட்டு, குன்னவலம், இராமஞ்சேரி ஊராட்சிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. இராஜேந்திரன், வட்டாட்சியர் ( பொறுப்பு ) பரமசிவம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுலோச்சனா, பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், ஒன்றிய செயலாளர்கள் கூளூர் எம். இராஜேந்திரன், எஸ். மகாலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் ப. சிட்டிபாபு, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வி. எஸ். நேதாஜி, டி. மோதிலால், ஒன்றிய கழக நிர்வாகிகள் கே. பாஸ்கரன், இ. இலட்சுமணன், சித்ரா ரமேஷ், தா. நடராசன், காஞ்சிப்பாடி பி. சரவணன், எம். எழிலரசன், வி. எஸ். சதீஷ், ஆர். தனசேகர், ஆர்.எஸ். சுதாகர், சீனிவாசன், ஆர்.எஸ். பழனி, ஏ.பழனி, மகி, ஏழுமலை, பரதன், தமிழ்மணி, கஜேந்திரன், எல்லப்ப நாயுடு பேட்டை முருகன், காரணி நிசாம்பட்டு கருணாநிதி, பிரிதிவி, குன்னவலம் நாகன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.